


ஶ்ரீ வேதவ்யாஸாய நம:

ஶ்ரீ சங்கர பகவத்பாதாச்சார்ய பரம்பராகத மூலாம்னாய ஸர்வஜ்ஞ பீட
ஶ்ரீ காஞ்சி காமகோடி பீடம் - காஞ்சிபுரம்

வேத தர்மசாஸ்திர பரிபாலன ஸபை கும்பகோணம் (பதிவு: 1942)

# தர்மஸந்தேஶம் - 9

ஜகத்குரு ஶ்ரீஶ்ரீஶ்ரீ காஞ்சீஆசார்யாளின் ஆக்ஞையின்படி
Dr. S வேணுகோபால ஶர்மா அவர்களால் - வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபைக்காக
தொகுத்து வழங்கப்பட்டு 25-06-2020 வியாழக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.

**நமஸ்காரங்கள்.**

ஆஹாரத்திற்கும் ஆசாரத்திற்கும் இடையே உள்ள தொடர்பானது விசாரிக்கப்பட்டு வருகிறது. நமது வாழ்வில் நாம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நொடியும் செய்யும் எந்த செயலும் நம்மை தர்மத்தின் பாதையிலிருந்து விலக்கிவிட்டு விடக்கூடாது என்பதற்காகத்தான் நமது தர்ம ஶாஸ்திரங்களின் மூலமாக மஹரிஷிகள் நம்மை வழிநடத்துகின்றனர். அவர்கள் காட்டிய வழியில் செல்லும் வரை நமக்கு கேடில்லை. வழி மாறும் போதுதான் துன்பத்திற்கான விதைகள் விதைக்கப்படுகின்றன. ஆஹாரத்தில் ஆசாரம் எனும்போது அது ஆஹாரத்துடன் தொடர்புடைய எல்லாவற்றிலும் தொடர்பு கொண்டுள்ளதை நாம் கடந்த வாரம் சிந்தித்திருந்தோம். காய்கறிகள், பாத்திரங்கள், அடுப்பு, சமைப்பவர், சமைக்கும் இடம் என அனைத்திலும் ஆசாரத்தின் பங்கு என்ன என்பது விசாரிக்கப்பட்டது. இவையெல்லாம் மூன்று நிலைகளில் பார்க்கப்படவேண்டும். 1)புறக்கண்களுக்கும் பிற இந்திரியங்களுக்கும் புலப்படக்கூடிய முதல் நிலை 2) நமது இந்திரியங்களுக்கு புலப்படாமல் தவ வலிமை பொருந்திய ரிஷிகளின் கண்களுக்கு மட்டும் புலப்படும் மத்திய நிலை 3) ரிஷிகளுடைய எல்லையையும் தாண்டி வேதங்களிலேயே குறிப்பிடப்படக்கூடியதாக இருக்கும் உயர்நிலை. பல இடங்களில் இதிஹாஸ புராணங்களில் ஈஶ்வரனே சொல்லக்கூடியதாக குறிப்பிடப்படுபவைகள் இம்மூன்றும் நிலையில் வைக்கப்பட்டு போற்றப்படும். அந்த வகையில் நாம் கடந்த வாரங்களில் சிந்தித்திருந்தபடி ஸத்வம், ரஜஸ் மற்றும் தமஸ் என்று மூன்று மனோவ்ருத்திகளால் ஆளப்படுபவர்கள் எங்ஙனம் வ்யவஹாரம் செய்வார்கள் என்று பகவத் கீதையில் பகவான் ஶ்ரீ கிருஷ்ணர் கூறியது இங்கே நம்மால் சிந்திக்கத்தக்கது. பொதுவாக ஆஹாரங்களில் எந்த வகையான உணவு பதார்த்தங்களை நாம் உண்ண வேண்டும் எனும் குறிப்புகள் நம் ஸ்மிருதிகளில் காணப்படுகின்றன. எவையெல்லாம் உண்ணத்தகாதவைகள் என்றும் குறிப்புகள் காணப்படுகின்றன. இதில் ஸ்வாரஸ்யம் என்னவென்றால் மனித இனத்திடம் மட்டுமே இந்த ஸத்வ, ரஜஸ், தமஸ் குணங்கள் காணப்படுவதை நாம் அறிவோம். ஆனாலும் நம்மால் உண்ணப்படும்

உணவுப் பண்டங்களிலும் இம்முக்குணங்கள் காணப்படுகின்றன என்பது ஆயுர்வேதம் காணும் ரகசியம். ஆக எவர்க்கெல்லாம் ஸ்வபாவமாகவே ஸத்வகுணம் மேலோங்கி இருக்குமோ அவர்களும், ஸத்வகுணம் இயற்கையாக உடலோடு பிறக்காவிட்டாலும் அதுதான் உயர்ந்த நிலை என்று உணர்ந்து அந்நிலையிலேயே தான் இருக்க வேண்டும் என்று விரும்புபவர்களும் எவ்விதமான ஆஹாரத்தை தேர்ந்தெடுப்பார்கள் என்று ஸ்ரீமத் பகவத் கீதையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறியிருப்பதை நாம் கவனிக்க வேண்டும். அவ்வாறே ராஜஸ குணம் மேலோங்கி இருப்பவருக்கும், தாமஸ குணம் மேலோங்கி இருப்பவருக்கும் இயற்கையாகவே எந்த விதமான உணவுப் பொருட்களில் விருப்பம் மேலோங்கி நிற்கும் என்பதையும் அங்கேயே கீதையின் பதினேழாவது அத்தியாயத்தில் பகவான் கூறியிருப்பதை நாம் படித்துத் தெளியலாம். இந்த முக்குணங்களுக்கு மனதுடனே மட்டும் தொடர்பிருந்தாலும் இவைகள் தனக்கு ஸமானமான நிலைகளை உடலளவிலும் ஏற்படுத்துவதை ஆயுர்வேத நூல்கள் நமக்கு கூறும். அதாவது மனதின் ஸத்வகுணமானது உடலளவில் கபம் என்பதாக த்ரவ வடிவில் காணப்படுவதாகவும், ரஜஸ் எனும் குணமானது பித்தம் என்பதாக மஞ்சள் நிறத்தாலான உஷ்ணத்துடன் கூடிய திரவ வடிவில் காணப்படுவதாகவும், தமஸ் என்னும் குணமானது வாதம் என்பதாக வாயுவின் குணங்களைக் கொண்டதாகவும் கூறப்படுகின்றன . இந்த வாதம், பித்தம் மற்றும் கபம் எனும் மூன்று நிலைகள் நமது மனித வாழ்வில் நமது ஆயுளுடனும், பகலுடனும், இரவுடனும் நாம் உண்ணும் உணவுடனும் தொடர்புடையதாக வாக்படாசார்யர் கூறுவார். அதாவது அஷ்டாங்க ஹ்ருதயம் எனும் தனது ஆயுர்வேத நூலில் அவர் **वयोऽहोरात्रिभुक्तानां तेऽन्त मध्यादिगाःक्रमात्।** (सू.1.8) 'வயோऽ ஹோராத்ரி-'வயோऽ ஹோராத்ரி-புக்தாநாம், தேந்புலப்படாத:க்ரமாத்' (ஸூ.1.8)

என்று வாயுவும், பித்தமும், கபமும் நமது ஆயுளிலும், பகலிலும், இரவிலும், உண்ணப்பட்ட உணவிலும் தனது ஆளுகையை அவைகளின் முடிவிலும், நடுவிலும், தொடக்கத்திலும் செலுத்துகின்றன என்று இந்தச் செய்யுளின் மூலமாக அவர் கூறுகிறார். இது விஷயமாய் விவரங்களை நாம் அடுத்த வாரம் சிந்திப்போம்.

**(தர்மம் மேலும் வளரும்)**

**"சர்வே ஜனா: ஸுகினோ பவந்து"**

**இப்படிக்கு - வேத தர்மசாஸ்திர பரிபாலன ஸபை (9884655618, vdspsabha@gmail.com)**

**Interested Devotees in conducting Veda Sammelanams please contact:**
**Sri V G Krishnamurthy 9884058582, Sri S Krithivasan 9840964078 & Sri V Thiagarajan 9176931061**
**Facebook ID & Instagram - Veda Dharma Sastra Paripalana**
**Website - http://vdspsabha.org**
**Youtube Subscribe name:" Veda Dharma Sastra Paripalana Sabha"**
**Interested People in WhatsApp & Telegram Group for devotional msgs can share your Name, Gothram and Veda Shaka @ 9884655618.**
**Interested Devotees in conducting Visesha Upanysasm please contact:**
**S. Sivakumar - 9884036362, K. Rajagopal - 9884655518, M. Sundar -9840494696**